திட்டங்களையும் வாரி வாரி வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றை ஒன்றுவிடாமல் நிறைவேற்றி, மக்களின் நம்பிக்கையை முழுமையாகப் பெற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

2014–2015 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 196 முதல் 210 வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிவாகி இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் அவைக்குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) சரி, பார்க்கலாம். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், point of order இதில் எப்படி வரும்? கவன ஈர்ப்பில் எப்படி point of order வரும்? (குறுக்கீடுகள்) கேட்க முடியாது, உட்காருங்கள். Point of order வராது. மாண்புமிகு அமைச்சர் பதில் அளித்தால் முடிந்துவிடும். கேள்வி கேட்கலாம். வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. திரும்ப point of order எல்லாம் கேட்க முடியாது. அதில் point of order கிடையாது. (குறுக்கீடு) அதில் point of order கிடையாது. அவர் கேட்டார், அதில் point of order கிடையாது. இரண்டாவது முறை அனுமதிப்பதில்லை. (குறுக்கீடு) கவன ஈர்ப்பில் இரண்டு கேள்விகள் அனுமதிப்பதில்லை. ஒரு கேள்வி கேட்கலாம். இரண்டு உறுப்பினர்கள் இரு கேள்விகள் கேட்கலாம். அதற்குமேல் விவாதம் கிடையாது. நீங்கள் உட்காருங்கள்.